# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## I-A பாகத்தின் ஸப்ளிமென்ட்.

## SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE,

APRIL 18, 1922.

நெ. 16.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ௵ ஏப்ரல் ௴ 18௳. [விலை, 6 பை.


# கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு

# Tamil Translations of Notifications by Government.

## லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

### விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1922-ம் ௵ மார்ச் ௴ 28௳.

நெ. 247.—அலங்கியம் யூனியன் போர்டுக்காக நடத்தப்பட்ட எலெக்ஷன்களில் சில பயன்படாமற்போய்விட்டதாலும், இந்த விஷயங்களில் புதிதாய் எலெக்ஷன்கள் நடத்தவேண்டியிருப்பதாலும், கவர்ன்மெண்டார் - 1922-ம் ௵ ஜனவரி ௴ 24௳ யுள்ள போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ கெஜெட் I-A பாகத்தின் 36-வது பக்கத்திலே (இங்க்லிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் 69-ம் நெ. விளம்பரத்தைத் திருத்தி, 1920-ம் ௵த்திய சென்ன பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின் 10-வது ஷெட்யூலைச் சேர்ந்த 13-வது விதியிற் கண்ட விலக்கு நிபந்தனையின்படி, அதே விதியின் முந்திய பாகத்தின்படி கொடுக்கப்பட்டிருக்கும் காலத்தை இரண்டு மாதங்களுக்கு அதிகப்படுத்துவதுமல்லாமல், 1922-ம் ௵ ஜூன் ௴ 1௳ யன்றைக்கு அலங்கியம் யூனியன் போர்ட் முதல் தடவையாய் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், அதே ஷெட்யூலைச் சேர்ந்த 15-வது விதியிற்கண்ட (2) குறிப்பிட்ட உபவிதியின்படி அதற்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டும் நியமிக்கப்பட்டுமுள்ள மெம்பர்கள் ஷை தேதியில் உத்தியோகம் வகிக்க ஆரம்பிக்கவேண்டுமென்றும் நிஷ்கரிஷை செய்கிறார்கள்.

---

நெ. 251.—1920-ம் ௵த்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகளாக்ட் 10-வது ஷெட்யூலைச் சேர்ந்த 13-வது விதியின்படியும், 1922-ம் ௵ ஜனவரி ௴ 24௳ யுள்ள போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் I-A பாகத்தின் 36-வது பக்கத்திலே (இங்க்லிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் 69-ம் நெ. விளம்பரத்தைத் திருத்தியும், பிரதேச கவர்ன்மெண்டார் - கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள சூலூர், பல்லடம் யூனியன் போர்டுகள் 1922-ம் ௵ ஏப்ரல் ௴ 1௳ யன்றைக்கு முதல் தடவையாய் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், அதே ஷெட்யூலைச் சேர்ந்த 15-வது விதியிற்கண்ட (2) குறிப்பிட்ட உபவிதியின்படி புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டும் நியமிக்கப்பட்டுமுள்ள மெம்பர்கள் ஷை தேதியில் உத்தியோகம் வகிக்க ஆரம்பிக்கவேண்டுமென்றும் இதனால் நிஷ்கரிஷை செய்கிறார்கள்.

எப். ஜெ. ரிச்சர்ட்ஸ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*


MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.